அருள்பொலி ஆதிகோணநாயகர் கும்பாபிஷேக அணிமலர்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28-ம் ௳

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவுபெற்றது

# இந்து சாதனம்

Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

பிரதி விலை: சதம் 40

புத் - 93 ] யாழ்ப்பாணம்:- சித்தார்த்தி ௵ தை ௴ 25-1-80., 1, 8-2-1980 வெள்ளிக்கிழமை [ இல - 2

# அவனிக்கோர் ஆத்மீக விளக்கு

## திரு தம்பலகாமம் ஆதிகோணநாயகசுவாமி அருள் ஒளி

சைவசித்தாந்த தீபகமாய்த் தெய்வ ஒளி பரப்பும் ஈழவள நாட்டின் ஈசானத்து இலங்கும் தேசுமிகுந்த திருத்தலங்களுள் நற்றவக் குரவரின் தேவாரப்புகழ்வாய்ந்த திருக்கோணேஸ்வரத்தின் சோதி மணம் வீசும் திருத்தம்பலகாமம் என்னும் புண்ணிய பதியிலே ஹம்ச கமனும்பிகா தேவி சமேத அருள்மிகு ஆதி கோண நாயக சுவாமி தேவத்தானம் இயற்று மகா கும்பாபிஷேகம் மகத்தானதாய் மாநிலமெங்கும் இறை ஒளி வீசும் மாண்பினதாய் ஓங்கும் என்பது தேவத்தான திருவாகச் சிர்சால் பெருமக்களின் அரு முயற்சியிற் காணக்கூடியதாயிருக்கின்றது.



வரலாற்றுப் புகழ்வாய்ந்த திருக்கோணமலையும் சூழலும் புனித புண்ணியபூமியாம் என்பதை யாரும் எடுத்தியம்ப வேண்டியதில்லை. இயற்கைவனப்பு ஒருபால். இரைந்தெழுதிரைகள் விரைந்து வேத ஒலி சப்திக்குமாபோல் எழுப்பும் நாதம் ஒருபால் இராவணேஸ்வரனை என்றென்றும் எண்ண வைக்கும் நிகழ்ச்சிக்கிடமாய தொன்மை ஒருபால். ஈழத்தின் வாழ்வுதான் என்று இருங்கடல நோக்கிப் பாய்ந்தோடும் மகாவலி இரு கிளைகளாகப் பிரிந்து வனப்புக்கு வனப்பூட்டிய வாறு அழகொழுகும் துறைமுக அமைப்பு இனொருபாலாக இலங்க இப்புனித நிலத்திலே பூர்வீகப் பொலிவுடன் வேத சிவாகம மேன்மையுடன் விளங்கும் திருத்தலங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருத்தம்பலகாமம் ஸ்ரீ ஆதிகோண நாயக சுவாமி ஆலயம் சிவபெருமானின் மணிமகுடத்தில் விளங்கு மதிநிதி போலப் பொலிகின்றது.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையின் தருவிலே கருவான சிந்தனை தானியக் களஞ்சியமாய்த் தாரணிகாகும் திருதம்பலகாமத்தில் நம்பனடியார்களுக்கு நம்பிக்கை நாட்டும் வகையிற் செயற்பிட்டமாகி உருவான பெருங்கோயில்

இப்பொழுது எப்பொழுதுமில்லாத அமைப்பாக ஸ்ரீ ஹம்ச கமனும்பிகா தேவி சமேத அருள்மிகு



ஸ்ரீ ஆதி கோண நாயக சுவாமி ஆலயமாக அலங்காரத்தோடு அவனிக்கோர் ஆத்மீக விளக்காக விளங்குகின்றது.

மூலஸ்தான திரிதள விமானமென்ன. அம்பாள் துவிதள விமானமென்ன, சுவாமி கர்ப்பக்கிரகவிமானமென்ன அம்பாள் கர்ப்பக்கிரக விமானமென்ன ஆலயச் சுவர்களில் சாலவும் சீராய் ஆன்றோர் அமைத்த அணி பெறு ஓவியங்கள் என்ன, கணபதி கோயில் என்ன கந்தன் வாயிலென்ன, நடராசர் கோயில் என்ன, நவக்கிரக மூர்த்திகள் வாயில் என்ன, வைரவ நாக கம்பிரான் கோயிலென்ன சண்டேசுரர் கோயில் வாயில் என்ன மடைப் பள்ளி அமைப்பென்ன, இவற்றையெல்லாம் தவப் பேறுகக் கருதிக் கடமை யாற்றத் தருமகர்த்தாக்கள, ஆணைப் பணித் தொண்டா யாவரும் அலுவலாற்றுப அகததன அணியென்ன எல்லாம பழமையின வளர்த் தைப் பாதுகாத்துப் புதுமையையேபுகட்டுகின்றன

கோணேசர் அன்று
குடிகொண்ட கோயில்
மானேசர் வாங்க மயமாகப்
— பேணேசப
ஆதிகோண நாயகனுர்
ஆலயச்சீர்க் காவலர்கள்
யாதிவர்கள் றெண்டிலுக்கிடு.

( முன் திருக்கோணேசர் வளர்ச்சி 4-ம் பக்கம்

## குறிஞ்சிக் குமரன் கோயில்

போதனைப் பல்கலைக் கழகத்தின் பண்புக்கு ஆராதனைபோல் விளங்குகின்றது அக் குறிஞ்சி நிலத்திற் செறிந்துள்ள கந்தமலையிலமைந்த குமரகோட்டம். குன்று தோறுடல் செய்யும் குமரன் இயற்கை வனப்பு இலங்கும் இப் புண்ணிய பூமியில் எழுந்தருளி அறிவுகொழுந்து பிரகாசிக்கத் துணை செய்கின்றார். இத்தகைய தத்துவமமைந்த புனிதத் தலத்தை அமைக்க முயன்றவர்களுள் அரியவராகிய பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி அவர்கள் இப்பொழுது அமரராய் விட்டனர்.

பேராதனைக் கழக இந்து மாணவர் சங்கம் இக் கோயிலை மிக்க பணிவுடன் பேணி வருகின்றனர் என்பதை (6-2-1980) புதன்கிழமை சித்தார்த்தி தைத் திங்கள் 23-ஆம் நாள் நிகழவிருக்கும் அஷ்ட பந்தன சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் அறிவுறுத்துகின்றது.

பிரதிஷ்டா குரு வாகச் சிவாகம கிரியா சிரோரத்தினம் இணுவை பிரம்மஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் அவர்கள் தலைமை தாங்குகின்றனர்.

இது பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தின் உபயம். —

## இந்துசமய அமைச்சின் பணியை ஏத்தி நல்லை ஆதீனம் பாராட்டு

மேற்குறிப்பிட்ட விடயம்பற்றி எம்மால் அனுப்பப்பட்ட விடயத்தைத் தெளிவாகத் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டதற்கு மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். புதிதாக நிறுவப்பெற்ற எம் திணைக்களத்திற்குத் தாங்கள் புரிகின்ற ஒத்துழைப்பிற்கு எம் உளங்கனிந்த பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

உயிர்ப்பலி பற்றி எமது அமைச்சர் எடுத்துள்ள தீர்மானத்தை நல்லூர் நல்லை ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் குருமகா சந்நிதானம் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். மேலும் அவர் குறிப்பிட்டது பின் வருமாறு!

இறைவனின் உறைவிடம் ஆலயம், இறைவனே, இறைவியோ, தெய்வம் யாவும், கருணையின் வடிவம், அருள்வடிவாயமர்ந்து ஆன்மாக்களுக்கு ஆண்டவன் அருள் செய்யுமிடமே ஆலயம. ஆகவேதான அருளமிகு என்ற சொல்லை முன் வைக்கின்றோம். தருமதைத, நற்கருமங்களைப் பேணி வளர்ப்பவை ஆலயங்கள், ஆனமா இறைவனுடன் லயப்படுமிடமே ஆ-லயம் எனப்படும். திரு நிறைந்த இடம் ஆலயம். ஆதலாலேயே திருக்கோயில் எனப்படும்.

தர்மத்தைப் பாதுகாப்பவர்களே, தர்மகர்த்தாக்களாவர். தர்மததுக்கு விரோதமான எந்தக்காரியத்தையும ஆண்டவன் பேரால், ஆலயத்தில் செய்யவிடாது தடுப்பதுவே சைவப் பெருமககளும், தர்மகர்த்தாக்களும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது.

கொலை, களவு. கபம், காமம், சூது இவ்வைந்தும் பஞ்சமாபாதகம் எனபபடும். இவை எமது சமயம் என்றும் புறகணித்து வருபவை. இவ்வைந்தின மூலம வரும் எவ்வித வருவாயும் அறப்பணிக்கு உதவாதது ஆகும். அறத்துக்கு விரோதமான வழிகளில் பொருளீட்டி, அது ஆலய அறபபணி என்று கூறுவது, பசுத்தோல் போர்த்த புலி வேடமாகும. இது பாவத்திலும் பாவம்.

அருள்மிகு ஆண்டவன் சந்நிதிகளை உயிர்ப்பலி செய்யும் கொலைக்களங்களாக மாற்றுவதோ, அன்றி அவ்விதமான பாபச் செயலுக்கு ஒத்தாசை புரியும் இடமாக அமைபபதோ கொடிய பாபம எனபதை அறிவுடைப் பெரியோர்கள் உணர வேண்டும்.

பஞ்சமாபாதகத்திற் கொடியது கொலைப் பாவம். அரசாட்சிச் சட்டப்படி கொலை செய்ய ஏவினவரும், கொலை செய்வதைக் கண்டும் தடுக்காதவரும், கொலை செய்தவருக்கு உடந்தையாயி

( வளர்ச்சி 2-ம் பக்கம் )

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சித்தார்த்தி ஞு தை மீ
25, 1, 8-2-80 வெள்ளிக்கிழமை

## இட்ட சட்டம் இயங்கவேண்டும்

சமய அலுவல்களுக்குத் தனி அமைச்சு ஒன்று அமைந்தது சந்தர்ப்பத்துக்கேற்ற ஒரு சம்பிரதாயம் என்று மக்கள் எண்ணிய துண்டு. ஆனால் இவ் வமைச்சு நிறுவப்பெற்றுச் சில திங்கள்களுக்குள் இந்து சமய சம்பந்தமான அலுவல்கள் பலகைாளப்பட்டதும் இப்பொழுது உருப்படியாக ஆலயங்களிற் பலியிடுவதை முற்றாக ஒழிக்க ஆவன செய்யப்படுவதும் அமைச்சின் அருமையை எடுத்துக் காட்டுகின்றன.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

என்னும்பொழுது ஆற்றல் படைத்த அமைச்சன் செய்கைக்குகந்த கருவிகளையும் செய்வதற்கேற்ற காலத்தையும் செய் வழியையும் மாட்சியுடன் அமைந்தவன் என்பது பொருளாகும்.

அமைச்சன் உள்ளபடி எவ்வாறிருக்க வேண்டுமென்பதை அருமையாக விளக்குகின்றார் வள்ளுவனார்,

வன்கண் குடிகாத்தல்
கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

கற்றறிதலையும் ஆள்வினையையும் உற்று நோக்கிய பரிமேலழகர் "நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும் முயற்சியும்" என்று விளக்கம் கூறியிருக்கின்றனர்.

ஆலயச்சூழலில் அமைவதென்ன அமையக்கூடாததென்ன என்று சமய சாத்திர நூல்களைக் கற்றுத் தவிர்வனவற்றை அறிதல் முக்கியமென்பதை இந்து சமய அலுவல்கள் அமைச்சர் கற்றிந்திருப்பது ஆலயங்களிற் பலியிடுதலைத் தடுக்க அமைச்சு ஆவன செய்தமையிலிருந்து புலப்படுகின்றது.

ஒன்றை அறிந்துவிட்டாற் போதாது! நன்றென்று தொடர்ந்து அதைச் செயற்படுத்தல், அவ்வகையிலே அணிவு தோன்றச் சொல்லுதலும் கல்லமைச்சனின் இலக்கணமாகும்.

இவ்விதமாக இப்பொழுது அரசு, சமய

தவப் பொழுதாக்கச்

# சிவராத்திரி விரதம்

## அகத்திருள் போக்க அரன்பிழம்புருவை அர்ச்சிப்போம்

### வஞ்சப் புலன்கள் மயக்கம் நீக்க வழிபாட்டுக்குகந்த திருநாள்

கடல்சூழ்ந்த பூமியென்பர் புலவோர், ஆனால் அது இருள் சூழ்ந்த உலகம் ஆக மாறிவிட்டது. ஆணவ இருள் தாண்டவம் ஆடும் அமர்க்களம் என்று சொன்னால் அதுவும் போதாது. கர்வம் சர்வ மயம். தத்தம் கொள்கையே அமைவதாகக் கத்தித் திரிகின்றனர். சமயத்தைச் சாட்டிக்கொண்டு சமயகுரவர்கள் திருப்பெயர்களைச் சாற்றிக்கொண்டுதான் இந்த அகந்தையில் அமைந்திருக்கின்றனர். இந்த இருட்படலம் எந்த வகையில் நீங்கும் என்று ஏங்கியிருக்கும் இவ் வேளையில் ஒரு தென்புக்கிடம் இருக்கின்றது.

அதுதான் சிவராத்திரி விரதம். நோன்புகளின் மாண்புடைய மாசித் திங்களிலே திரயோதசி, சதுர்த்தசி சேர்ந்த திருவோணம் அவிட்டம் ஒன்றுவது பொருந்திய இரவு இலிங்கோற்சவம் இப்பெருவேளையில் இலங்குவதை எதிர்பார்த்த வண்ணமாய்த் திருமுறை ஓதியும் சிவசரிதை கேட்டும் மந்திரம் உச்சரித்தும் நிற்கும் அடியார்கள் உள்ளத்திலே ஒளி தோன்றும். சூரனுக்குச் சற்று அறிவு அலக்கிய விசுவரூபம் போன்ற இந்தத் தோற்றத்தைக் கண்டு சற்றுப்பொழுதாவது நல்ல நிவுபெற நாம் நாட வேண்டாமா?



நாயன்மார்கள் நம்பன் அடியார்கள் யாவரும் ஈசனை இறை ஒளியாகவே கண்டு களித்தார்கள். அவர்கள் விண்ட வியன் சொல்லெல்லாம் — சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே என்றல்லவா இருக்கின்றன.

"வேதமாய் வேள்வியாகி விளங்கும்பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகந் நிலை தான்சொல்ல வதொன்றே!'

"பூமனும் திசைமுகன் தானும் பொற்பமர்
வாமனன் அறிகிலா வண்ணம் ஒங்கெரி
ஆமென உயர்ந்தவன்"

என்றெல்லாம் சோதி வானவனைத் தொழுதார்கள். எதற்காக?

மலவிருள் போக்க, மால் மயக்கம் நீக்கவே விளக்கிருக்கின்றது; சமயவிளக்கு. இந்த விளக்கிலே ஒளிபெற வேண்டி விரதங்கள் பூண்டனர் குரவர்கள், அந்த வழியை விட்டு அந்தக வழியிலே சென்று கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு நினைவூட்ட ஒரு சிவராத்திரி வருகின்றது வம்மின் அடியார்களே! செய்மின் சிவப்பணி! உய்மின் ஒளியைக் கண்டு என்று கூவி அழைக்கின்றது சிவராத்திரி விரத நாள்.

ஒழுக்கத்துக்குச் சால்புடைய விதிகளை இயற்றுவதற்கு, அமைச்சர் ஒருவர் அத்தகைய தகுதி வாய்ந்தவராய் இருப்பது பெரியதொரு வாய்ப்பாகும். அமைச்சர்கள் மாண்புமிகு இராசதுரையும், தொண்டைமானும் சமயாசார அலுவல்களில் ஆவன செய்ய நன்கியங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆலயங்கள் சாலவும் புனிதமாக நிலவ வேண்டும். அப்புனிதத்தை மாசுபடுத்துவன பலியிடுதலும் சூழலில் மதுபானம் வழங்கப்படுதலும் மாமிச போசன விடுதிச்சாலைகளும். ஆகவே இம்மூன்றுவது ஆகாத பழி பாதகங்களை மக்கள் தாமாக விலக்கிக்கொள்வதன்று.

அரசு மக்களுக்கு ஆதரவு அளிப்பது மிக நன்று.

இறைவனுடன இலயிக்கின்ற நீர்மைக்குரிய இடம் ஆலயம். பஞ்சப் புலன்களின் வஞ்சகச்சூட்சிகளுக்கு இடங் கொடாதிருக்க வேண்டிய சூழ்நிலை ஆலயத்தில் அமைய வேண்டும். அவ்வாறு இப் புனித தலங்கள் இயங்குவதற்கு மாறாக சமய ஒழுக்கமில்லாதவர்கள் இழைக்கும் தீமைகளை அகற்ற மக்களுக்கு நல் உதவி அளிக்க வேண்டிய கடமை அரசின்பெரும் பொறுப்பாகும்.

இதனை இந்து சமய அலுவல்கள் அமைச்சு

# தை பிறந்தது பசு வதை இறந்தது

இந்துக் கோவில்களில் உயிர்ப்பலியிடும் வழக்கம் ஒழிக்கப்பட்டு விட்டபோதிலும இன்னும் இரண்டொரு ஆலயங்களில் இவ்வழக்கம் இருப்பதாக அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவலை அடுத்து இவ்வறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.

இந்துக்கோவில்களில் உயிர்ப்பலியிடும் வழக்கம் நிறுத்தப்படல்வேண்டும் என்கின்ற தீர்மானம் 1979ம் ஆண்டு 6-ஆம் மாதமே அமைச்சர் அவையினாலும், மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன அவர்களாலும் தீர்மானிக்கப்பட்டுவிட்ட போதிலும இத்தீர்மானத்தை எந்த அமைச்சின் மூலம் அமுல் செய்வது என்று ஆராயப்பட்டது. இந்து சமயத்திற்குத் தனித் திணைக்களம அமைக்கப் பெற்றதை அடுத்து உயிர்ப்பலி ஒழிப்பின் இறுதிக் கட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பு பிரதேச அபிவிருத்தி, இந்து சமயம்,தமிழ் அலுவல அமைச்சிற்குப் பாரிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தினை தம்மிடத்தில் பாரித்த தத்துவத்தின் பலத்தைக் கொண்டு தமிழ தை மாதம் முதலாம் திகதி 1980-01-15 செவ்வாய் நள் இரவில் இருந்து இந்துக்கோவில்களில உயிர்ப்பலியிடுதல் தடை செய்யப்பட்டுள்ளது என்று ஆணை பிறப்பித்துள்ளார்,

புத்தர் பகவான் உயிர்ப்பலியிடுதலை ஒழித்து முதலாவது கட்டம். நாவலர் பெருமான் தில்லைவாழ் அந்தணருடன் வாதிட்டு வேள்வியில் உயிர்ப்பலியிடுதலை நிறுத்தியது இரண்டாம் கட்டம். இன்று எடுக்கப்படும் நடவடிக்கை இவ்விடயத்தின் மூன்றாவது கட்டமாகிய இறுதிக் கட்டம்.

இவ்விடயம் பற்றிப் பேசிய பிரதேச அபிவிருத்தி இந்துசமயத் தமிழ் அலுவல் அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள ஒரு இந்துக்கோவில் பலியிடுதலை நிறுத்துவதற்குத் தாம் இளைஞராக இருந்தபோது போரிட்டதை நினைவு கூர்ந்தார். இன்று பிரபல தமிழ் பத்திரிகை ஒன்றின் பத்திராதிபராக இருப்பவரும் பல இளைஞர்களும் பிரமுகர்களும் இவ்விடயத்தில் உழைத்ததையும் கோவில் தர்மகர்த்தாக்கள் தாங்களாகவே உயிர்ப்பலியிடுதலை நிறுத்தி விட்டார்கள் என்றும் கூறினர். எனது இளம் வயது அபிலாசைகளை அமைச்சராக இருந்து நிறைவேற்றிவைக்க இறைவன் திருவுளங் கொண்டது திருவருளே என்றும் அவர் இந்துசமயத் திணைக்கள இயக்குநர் வே. ந. சிவராச கூறினர்.

## இந்து சமய அமைச்சின் ....

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

ருந்தவரும் கொலைப்பாவிகளாகவே கருதப்பட்டு ராஜ தண்டனைக்கு ஆளாகின்றனர் அப்படியனால் ஆண்டவன் அருளாட்சியிலே அவன் சந்நிதியிலே நடக்கும் கொலைக்கு எத்தகையதண்டனை கிடைக்கும்?

உயிர்ப்பலிக்கு ஆடு ,கோழி மாடுதானா பலியிட வேண்டும்? மனிதன் தன் வயிற்றுக்குப் பலிபீடத்திற்கு உகந்த வற்றை ஆண்டவனைச் சாட்டிச் செய்கிறான்.

முருகனுடைய வாகனம் ஆடு (மேடம் ஊர்தியாக உய்த்து) என்கிறது கந் புராணம். முருகனுடைய கொடி கோழி. அதிகாலையில் ஆவலுடன் கொக்கு - அறு - கோ ' என முருகன் நாமத்தைச் செந்தமிழிற் கூறி எமக்கு விடிய வைக்கும் சேவலு, அதன் வாழ்வை முடியவைத்து வயிற்றிலே மடியவைத்து 'முருகா' என மூவாயிரம் முருக நாமம் சொன்னாலும் அவன் அருள் வருமா? இவர்களைத்தான் அருணகிரிப் பெருமான்,

கோழிக் கொடியன் அடிபணியாமற் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள் என்கிறார்.

### பகுத்தறிவை உபயோகியுங்கள்

சைவப் பெருமக்களே, உயிராக ஆடு மாடுகளைக், கொடுக்கும் நீங்கள் அதன் பெறுமதியைப் பணமாகக் கொடுத்துத் தருமத்தை வளருங்கள் எவ்வித உயிர் வதைக்கும் இடமளியாதீர்கள்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" - வள்ளுவர்

".கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்வது என் இச்சை பராபரமே"
- தாயுமானர்

( திரு. வே. த. சிவராசா )
( பணிப்பாளர், இந்துசமயப் பிரிவு )

நன்குணர்ந்து செயற்படுவது மிக மிகப் போற்றப்பட வேண்டும். ஆகையால் முக்கியமாகச் சைவ சமயிகள் இந்த அரச ஆதரவை நன்கு பயன் படுத்துவார்களாக,

### மகாசிவராத்திரி வழிபாடு

யாழ். அரசினர் வைத்தியசாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் மகா சிவராத்திரி வழிபாடு மாசி 2 ஆம் நாள் ( 14-2-80 ) மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். அபிடேகம் விசேட பூசை ஆராதனையையடுத்து. கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவு ஆதியனவும், நான்கு யாமமும் விசேடபூசைவழிபாடும்நிகழும்.

சாந்தையர் மடம்
ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்
சைவசமய
## அபிவிருத்திக் கழகம்
## சைவ சமய அறிவுப் பரீட்சை
1980.

இக்கழகத்தினரால் 18 வருடகாலமாக நடாத்தப்பெற்று வரும் மேற்படி பரீட்சை இவ்வருடமும் வழமைபோல் நடைபெறும்.

இறுதி 31-1-80. பரீட்சை நாள் 10-2-80 ஞாயிறு காலை 9 மணி

1 சமய அறிவுக் கட்டுரை எழுதுதல் நேரம்: 1 30 மணி பரீட்சைத்தினத்தன்று கொடுக்கப்படும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து எழுதுதல.

பங்குபெறும் வகுப்புக்கள்:
12, 11, 10. 9, 8. 7. 6.

பிரவேசப்பணம்: ரூபா 1-00

2 சமய அறிவுப்பரீட்சை

3 திருமுறை மனனப் போட்டி.

4 நீதிநூல் மனனப்போட்டி சிறுவர் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம. பிரவேசம் சதம் 50

கழகத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு விசேடமாக நடைபெறவிருக்கும் சமய அறிவுப் பொதுப்பரீட்சை.

குறிப்பு: ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப்பரிசில்களும் வழங்கப்பெறும். வேண்டிய விபரங்களுக்கு கௌரவ செயலாளரிடம அறிந்து கொள்ளலாம்.

அரியாலையில் சிவராத்திரி விழா

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் மகா சிவராத்திரி வழிபாடு மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும். கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு, இசைநிகழ்ச்சி முதலியன இடம்பெறும். இதற்கான ஒழுங்குகளை அரியாலை இளைஞர் இந்துமாமன்றம் செய்துள்ளது.

## புலால் பிறிதொன்றன் புண்ணுமே!



பத்தர்: "தனிஅமைச்சு சமய அபிமானிசளால் பாராட்டப்படுகிறது! கோயிலின் புனிதத்தைப் பேணவும் — பெருமையை விளக்கவும் திட்டும் திட்டங்கள் செயற்படும்நாள் சைவ உலகுக்கு விடிவு தரும் நாள்என்று சொல்லவேணும்!

சித்தர்: "விடிவுதான் விடிவு? "மிருகவதைக் கொடுமையைப்பற்றிப் பேசுபவரை எல்லா உயிரும் தொழ வேண்டிய காலமப்பா இது? ஆப?

"உண்ணாமை வேண்டும்
புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்"

என்று இடித்துரைக்கின்ற புதுக்கவிராயர் இதை எம்மவர் சிந்திந்தால்......?

- "நாயன்மார், நாதன்'

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
ஈட்டு வழக்கு இலக்கம் 12778

சங்கரப்பிள்ளை சுப்பையா (இறந்தவர்)
A. சங்கரப்பிள்ளை நாராணபிள்ளை (இறந்தவர்)
B. சந்திரசேகரம் வல்லிபுரம் } இறந்தவரின் சட்டப் பிரதிநிதிகள்:
C. வல்லிபுரம் ஏரம்பு }
B. மேற்படி பெண் சின்னம்மா }
(எல்லோரும் துன்னாலை தெற்கு)
— வழக்காளிகள்,

எதிராக
அம்பலவி கைம் பெண் வள்ளியம்மை
அரசடி, கரவெட்டி.
— எதிராளி

மேலேகுறிப்பிட்ட வழக்கில் 1976 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 3 ஆம் திகதி தீர்ந்த தீர்வைப்படியும், எனக்கு கோட்டாரால் கட்டளையிடப்பட்ட அதிகாரப்படியும், இதன்கீழ் விபரிக்கப்படும் அசைவற்ற ஆதனத்தை 1980 ம் ஆண்டு பங்குனிமாதம் 3 ஆம் திகதி (3-3-1980) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி 30 நிமிஷ அளவிலகுறித்த ஆதனத்திலுள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைவிபரம்:- குறித்த எதிராளிகுறித்தவழக்காளிகளுக்கு ரூபா 6, 100 /- ம, மேலும ரூபா 4000 /-க்கு வருடம் ஒன்றுக்கு 6 % வீதவட்டியும், வழக்கு அணைந்த திகதியாகிய 1974 ம் ஆண்டு ஆவணிமாதம் 9 ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976 ஆம ஆண்டு புரட்டாதிமாதம் 3 ம திகதி வரையுமானவட்டியும், அதன் பின் தீர்வைமுழுத்தொகைக்கும் இறுக்கப்படும் படும வரை சட்டவட்டியான வருடம ஒன்றுக்கு 9 % வட்டியும், வழக்குச் செலவு ரூபா 599/93 சதமும, (இதல் நடைபெற்ற செலவு ரூபா 454 / 18½ சதமும, நடைபெறவேண்டிய செலவு ரூபா 66/87½ சதமும். மேலதிகசமயாசமயச் செலவு ரூபா 78 / 87½ சதமும (மொத்தம செலுத்தவேண்டிய தொகை ரூபா 7,887-50 சதத்தில இதுவரை செலுத்தப்பட்ட ரூபா 6,100/— கழித்து, மிகுதி ரூபா 1787/50 சதம இன்னும் செலுத்த வேண்டியிருப்பதாலும,

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டை வேலிக் கோயிற்பற்று துன்னாலை செகறகொடி தேவன் குறிச்சியிறை "கோவோல" நிலபரப்பு 25, இதற்கு 1959 ம் ஆண்டு ஆனிமாதம் 29 ந் திகதி உலாந்தாமேஸ்தர் A. கோவிந்தபிள்ளையால 57 ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்ட படத்தன்படி நிலப்பரப்பு 35 குழி 18 ,21/ 32, இதில் ஆட்சிப்படி 10 ம துண்டுக்கு, பனைகளுடன் நிலப்பரப்பு 3 குளி 12, 24 / 32, எல்லை கிழக்கு 11 ம் இலக்கத்துண்டும 14 ம் துண்டின் ஒரு பகுதியும், வடக்கு பொதுப்பாதைப்புக்காக விடப்பட்ட 7 ம துண்டு மேற்கு குறித்த படத்தில் 9 ம துண்டு, தெற்கு குறித்தபடத்தில் 13 மதுண்டு இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 16, 133/ 50 சதம்.

கிளரி ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை,
7. 2. 1980.

ஆ. க. சதாசிவம்பிள்ளை
நீதிமன்ற விற்பனவு
ஆணையாளர்.

உ
சிவமயம்

THE SAIVA PRAKASA PRESS

# புண்ணியநாச்சி அம்மை தினம்
19 — 2 — 80

திருவருளை முன்னிட்டு ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் நினைவுதினம் நிகழும் சித்தார்த்தி ஸூ மாசிமாதம் 7ஆம்திகதி (19-2-80) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### காலை நிகழ்ச்சிகள்

9-00 மணி: ஆரம்பம்

- சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜை
- நாவலர் மண்டபம் விசேட பூஜை
- கோவிற் புராண படனம்
- வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் பெயரில் அபிஷேகம்
- மாகேசுர பூஜை

### மாலை நிகழ்ச்சிகள்

தலைவர்: திரு. ச. செல்வராசா அவர்கள்
(தலைவர், சைவ பரிபாலன சபை)

4-00 மணி: தலைவர் ஆரம்பித்து வைத்தல்
4-30 மணி: தமிழ்மறை ஓதல்
— சபையாரது தேவார வகுப்பு மாணவர்கள்
5-00 மணி: பண்ணிசை நிகழ்ச்சி
— பண்ணிசைத் தேர்வில் பரிசு பெறுபவர்கள்
6-30 மணி: பண்ணிசைப் போட்டிப் பரிசு வழங்கல்
— 'சிவநெறிப் புரவலர்' திரு. க. கனகராசா (J. P.) அவர்கள்
7-00 மணி: "புண்ணியநாச்சி அம்மையின் உளப்பண்பு"
— திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்
(பத்திராதிபர் — இந்துசாதனம்)
8-00 மணி: "திருவள்ளுவர் பெருமை"
— பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள்
8-30 மணி: நன்றியுரை

☞ அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்

த. சண்முகலிங்கம்
கௌரவ காரியதரிசி

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்
11-2-1980

உ
# மகா சிவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் திருவருளை முன்னிட்டு வருகிற வியாழக்கிழமை (14-2 80) அன்று சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இரவு சிவராத்திரி வழிபாடு வழமைபோல் நிகழும்.

### நிகழ்ச்சிகள்

இரவு 9-00 மணிக்கு சிவபூசா மண்டபத்தில் சிவபூசை நாவலர் மண்டபத்தில் நான்கு சாமமும் பூசை.

இரவு 10-00 — 11-00 மணி பண்ணிசை
சங்கீதபூஷணம் இ. நடராசா அவர்கள்

இரவு 11-00 — 12-00 மணி சொற்பொழிவு
"சிவராத்திரி மகிமை"
சித்தாந்த வித்தகர், சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள்

இரவு 12-00 — 1-00 மணி சொற்பொழிவு
"சிவநாம மகிமை"
திரு. ம. நமசிவாயம் அவர்கள்

இரவு 1-00 மணி "புராணபடனம்"
கந்தபுராணம் "அடிமுடி தேடு படலம்"

சைவாபிமானிகள் யாவரும் சமுகம் அளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

த. சண்முகலிங்கம்
கௌரவ காரியதரிசி

சைவபரிபாலன சபை.
யாழ்ப்பாணம் 14-3-1980.

கோட்டை முனீஸ்வரன்
தேவத்தானம்

யாழ் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவத்தானத்தில் பெரிய அசையாமணி பொருத்தப்பட்டுள்ளது. இத்திருமணி சென்ற 11-2-80 திங்களன்று நண்பகல் விசேட பூசை வழிபாட்டுடன் முதல் முறையாக ஒலித்தது!

## பொன். அருணசலம் நாட்டிற்கோர் மேற்கோள்

அரச சேவையில் அரிய பணியாற்றிப் பதவி ஏணியில் முதற்படியில நின்று ஸேர் (Sir) என்ற பட்டத்தைப் பெற்ற அண்ணல் அருணசலம் அவர்கள் சைவானுட்டான சீலராகத் திகழ்ந்தவர் என்பதைப் பொதுமக்கள் அவ்வளவு அறிந்திருக்கமாட்டார்கள

சைவசித்தாந்த அறிவினைத் தக்க ஆசிரியர்களபால் குருசீட முறையில் கற்றவர்கள் வள்ளல இராமநாதனும் ஸேர் அருணசலமும். இருவரும் ஆங்கிலத்திலே அரிய நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர். தாம் கற்ற சமய

(வளர்ச்சி 4-ம் பக்கம்)

Hindu Organ

Friday, 25-1-80, 1, 8-2 80

## CONSPICUOUSLY COMMENDABLE

The distribution of books free to school children up to and including grade nine in all the schools in the Island is a commendable step for which the Authorities must be heartily congratulated.

In the past, the beginning of the year was a busy, tiresome and taxing time for students and parents in the matter of purchasing books. It would, in some cases, take more than two months for students to be equipped with all their requirements in text books. And the first quarter will disappear with no real work done at school The thoughtful move by the Government, inspired by the laudable idea of the President, has, however, saved much trouble and heavy expenses for school-going children. Hence, the inauguration of this Significant Scheme as a further step in the major concept of Free Education really augurs well for the promotion of education.

But, as in other similar gifts, there is also the possibility of the donees becoming indifferent to this beneficial deeds and unwittingly creating problems for the Authorities by students failing to take care of the books issued to them thus causing great loss to the Department of Education.

It is, therefore, a duty for all concerned to put this Charitable Scheme to the best use and to be on guard against negligence in the handling and preservation of books

With the cost of living soaring higher and higher and with the threat of an impending crisis in the economy of the world hanging over every country like the Sword of Damocles, the people should realize the value of this scheme of supply of books free of cost and pay minute attention to the question of preserving these books to be redistributed the following year.

Here is a responsibility not merely for the Department of Education, or for Teachers but also for students and parents, a responsibility that has to be discharged in true patriotic manner with the best interest of the people and the country in mind.

We are confident that this new step will lead to further measures which will help the development of education in the fullest scope.

## MORE Rs. FOR MORAL TRAINING

Human Rights should form a subject in the curriculum of studies in schools. That is the wish of the President. It is a laudable idea.

However, in this context we wish to suggest that in as much as it is necessary for students to get acquainted with what the rights of Humans are, it is imperative that school going children should be taught what their duties are, both as students and as future citizens.

The three Rs. have been the traditional opening subjects for students of the first stage. But it has now been realized that a knowledge of Reading, Writing and Arithmetic alone will not do unless the student also knows what his Responsibilities and Rights are.

The beginner at school opens his account with an open mind without any sort of prejudice and easily absorbs whatever is told him by way of primary instruction. Naturally he must first know to read and write and to learn the science of numbers.

Now that the President has rightly pointed out that Human Rights also should be included in the curriculum of studies, it is appropriate to say that a knowledge of Human Rights will be complete and helpful only if the student is taught at once what his obligations are.

One owes a duty to another in the same way as one expects another to fulfil his obligation. This reciprocal moral training will be a sure method for a student to be able to arrange his ideas in orderly manner. Instruction in these subjects—Human Rights and Duties—will help the correct functioning of the mental activity of a student.

Political life in the world has become confusing and contradictory, always tending to create unnecessary tension, because early in life these politicians had not been fortunate in receiving elementary education in these important subjects of study, namely Rights and Responsibilities. Having reached adulthood without a proper instruction in these subjects that deal with the faculty of distinguishing between right and wrong, the amatuer politician often places over emphasis on Rights, all the time failing to realise that Responsibilities, must also be insisted on for the smooth development of society.

Here is a golden opportunity for training future politicians in their approach to citizenship, a step the President has in his rich experience of political affairs and principles, better known as the Science of the Art of Government, taken to ensure that the people of this country are guided in the proper understanding of democratic conceptions.

We feel it our duty to place this opinion before the Authorities for careful consideration.

## WORK FOR WORK'S SAKE

What is this wrangle about working hours and conditions of leave for those who are employees The Employer and the Employed are both members of the Community called the Country and have, therefore, a common objective namely the welfare of the nation. Where the Government is the Employer, the Employees, being themselves inhabitants of the country in question, cannot have adverse interests.

The conditions of service are determined according to the circumstances of the need for such service, its scope and above all the welfare of the sector whether public or private It is here there arises a difference in the determining of the conditions of service, The Government as employer will be more tolerant than the Private Sector which may have to be mindful of its own resources,

Employees are, therefore, an essential part of the people's enterprises. Hence they owe a duty to the people of whom they themselves are a part.

Thus the relationship of those who work for the people to the people as a whole is in effect a patriotic kinship connoting moral magnanimity.

In the light of this exposition, it is evident that everyone is in fact a worker in some sphere or other and has a duty to fulfill and a responsibility to discharge

The Administration of the affairs of a country depends for its efficiency on the quality and quantity of the work that is performed by those to whom such work is assigned. On the other hand those who render this work must be provided with all reasonable facilities for rest and recuperation. It is in this context that working hours are fixed and concessions of leave granted

Examining the system that prevailed in this country in the matter of working hours; there was a time when the working days included a half day each Saturday Employees were able to enj[...] at a stretch for[...] day and a half, [...] changing o rou[...] this week-en[...] was extended to [...] at a stretch



What is important in the need for development of the economy of this country is solid application by everyone who offers himself as worker. The benefit of whole hearted work is for the entire nation. The adverse circumstances that are daily affecting the economy of our country call for willing sacrifice by all. Let us work for work sake and help the people as a whole to withstand the onslaught of adversity.

The Authorities must on the other hand, pay adequately for work done taking into consideration the rising cost of living

## அவனிக்கோர்....,

1ம் பக்கத்து வளர்ச்சி

மூர்த்தங்கள் அந்நிய மூடர்களால் பாதிக்கப்பட்டவற்றில் நன்னிலையிலுள்ளவை சுவாமிமலைத் தூய இடத்தில் காப்பாற்றப்பட்டுப் பின் கோணமலைக் கிழங்காழ்வார் கைப்பட்டுத் திருத் தம்பலகாமத்தில் உருவெடுத்தவண்ணம் இக்கோயில் கோணேசர் குடிகொண்ட கோயில் என்க. அதன் மாண்பு சர்வாங்கமயமாகப் பேண நேசர் யார் எனின் ஆதிகோணநாயகர் கோயில் அறங்காவல் செய்யும் அன்பு அடியார் குழாமாகிய தர்மகர்த்தா சபையினர், அவர்களியற்றும் பெருந்தொண்டுக்கு யாதோ ஈடு? )

## பொன். அருணாசலம்

(3ம் பக்கத்து வளர்ச்சி)

பாடல்களை ஆங்கில மொழியிலே பொருளுற அழகாகப் பெயர்த்து வெளியிட்டிருக்கின்றனர்:

வீரர் அருணாசலம் அவர்களின் நினைவுநாளை இம்மாதம் கொழும்பிலே இந்துபரிபாலன சங்கம் என்றும்போல நினைவு கூர்ந்து நிகழ்ச்சிகளை நடத்தியது

இலங்கை மக்களின் பேரறிஞர்களில் ஒருவரும் சிறந்த சைவ சீலருமாகிய வீரர் அருணாசலம் அவர்களைப்பற்றி மாணவர்கள் அறிந்து அன்னாரின் அடிச்சுவட்டில நின்று சமயநெறியில் ஒழுகுதல் வேண்டும் என்பது இவ்வாண்டு நினைவு விழாவில் எடுக்கக் கூடிய ஒரு எண்ணம்.

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நானமறை யறங்க ளோங்க
நற்றவம வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெலலாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripa-*